

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 07.12.2024 அன்று கொடி நாள் அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு, ரூ.50,000/க்கான காசோலையினை கொடிநாள் நிதி நன்கொடையாக சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, அவர்களிடம் நேற்று முன்தினம் முகாம் அலுவலகத்தில் வழங்கினார். இந்நிகழ்வின்போது, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், முன்னாள் ராணுவ வீரர்கள் நல வாரியத்தின் உதவி இயக்குநர் எட்வர்ட் ராஜ் மரியா ஜான் ஆகியோர் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!... முதல் பக்கத் தொடர்ச்சி

குடியிருப்புகள் கட்டும் பணிகள், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணி, கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைக்கும் பணி, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் போன்ற பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

**கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில்** சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்துடன் இணைந்து, சென்னை, காசிமேட்டில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்தும் பணிகள், கடலூர் மாவட்டம், பெரியகுப்பம், புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டை ஆகிய கடலோர கிராமங்களில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் அரிப்பு தடுப்பு சுவர்களுடன் கூடிய புதிய மீன் இறங்கு தளங்கள் அமைக்கும் பணிகள், சென்னை, செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களில் 50 கோடி ரூபாய் செலவில் நவீன மீன்சந்தைகள் அமைக்கும் பணிகள், அம்பத்தூர் பால் பண்ணையில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பால் பொருட்கள், சிப்பம் கட்டும் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களுக்கான ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம், நுண்ணுயிரியல் பகுப்பாய்வு ஆய்வுக்கூடம் அமைக்கும் பணிகள், நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் அலை அமைக்கும் பணிகள் போன்ற பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு நடைபெற்று வரும் பணிகளை துரிதமாக முடித்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மீன்வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்,

தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மகாராஷ்டிராவில்

## முதலமைச்சரை தேர்ந்தெடுப்பதில் இழுபறி!

*மும்பை, நவ. 30 -*

மகாராஷ்டிராவில் அடுத்த முதலமைச்சரை தேர்ந்தெடுப்பதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது. ஏக்நாத் ஷிண்டே, அஜித்பவார் கோரிக்கைகளுக்கு பா.ஜ.க. எதிர்ப்பு தெரிவிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் நடந்து முடிந்த மகாராஷ்டிர சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 230 இடங்களை கைப்பற்றியது. முடிவுகள் வெளியாகி 6 நாட்களை தாண்டியும் முதலமைச்சரை தேர்ந்தெடுப்பதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது.

மொத்தம் உள்ள 42 அமைச்சர் பதவிக்கான இடங்களில் தங்கள் கைவசம் 50 சதவீத இலாகாக்களை வைத்துக்கொண்டு, சிவசேனாவுக்கு 30 சதவீதம், தேசியவாத காங்கிரஸுக்கு 20 சதவீதம் வழங்க பா.ஜ.க. முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகின. துணை முதலமைச்சர் பதவியை அஜீத் பவாரும், தனது மகனுக்கு துணை முதலமைச்சர் பதவியை வழங்க ஏக்நாத் ஷிண்டேவும் வலியுறுத்தி வருகின்றனர். ஏக்நாத் ஷிண்டேவின் கோரிக்கைக்கும், முந்தைய அரசில் தன்வசம் இருந்த முக்கிய துறைகளை மீண்டும் வழங்க வேண்டும் என்ற அஜீத் பவாரின் கோரிக்கைகளை ஏற்க பா.ஜ.க. மறுப்பு தெரிவித்து வருவதால், முதலமைச்சரை தேர்வு செய்வதில் சிக்கல் நீடிக்கிறது.




துணை முதலமைச்சர், இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி. கீதாஜீவன் தங்க மோதிரங்கள் அணிவித்தார். உடன் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் சிவக்குமார், உறைவிட மருத்துவர் டாக்டர் சைலஸ் ஜெபமணி மற்றும் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், பொதுக்குழு உறுப்பினர் கஸ்தூரி தங்கம், மாநகராட்சி மண்டலத் தலைவர் கலைச்செல்வி, மாமன்ற உறுப்பினர்கள் ஜெயசீலி, பவானி, நாகேஸ்வரி, வைதேகி, ஜெயலட்சுமி, வட்டச் செயலாளர்கள் பாலகுருசாமி, செந்தில்குமார், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் டி.கே.எஸ்.ரமேஷ், மாவட்ட மகளிர் அணித் தலைவர் கவிதா தேவி, மாவட்ட மருத்துவர் அணித் தலைவர் அருண்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் அருணாதேவி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கோகுல், மாநகர சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வினோத், துணை அமைப்பாளர் மகேஸ்வரன், மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர் சத்யா உள்ளிட்டோர் உள்ளனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், முகையூர் தெற்கு ஒன்றியச் செயலாளராக புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள எஸ்.லூயிஸ், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி ஆகியோரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். ஒன்றியச் செயலாளர் ஜி. ரவிச்சந்திரன், முன்னாள் ஒன்றியச் செயலாளர் பிரேமா அல்போன்ஸ், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் எம்.ஆர்.ராஜீவ் காந்தி உள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் உடனுள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி 1.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 1.12.2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 7 | பாபநாசம் | ஸ்ரீ துர்கா மஹால், புதிய பேருந்து நிலையம் எதிரில், பாபநாசம், தஞ்சாவூர். |
| | மாலை 4.00 மணி | | விராலிமலை | எம்.கே.எஸ். திருமண மண்டபம், மேட்டுச்சாலை, இலுப்பூர் புதுக்கோட்டை. |
| | காலை 9.00 மணி | 8 | சங்கரன்கோவில் | கோகுலம் மஹால், ரத வீதி, சங்கரன்கோவில். |
| | மாலை 4.00 மணி | | ஆலங்குளம் | ஏ.ஜெ. மஹால், மலைக்கோயில் வளைவு எதிர்ப்புறம், தென்காசி பிரதான சாலை, ஆலங்குளம், தென்காசி. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 28-11-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## 2,553 மருத்துவர் பணியிடங்களுக்கான தேர்வு!

*சென்னை, நவ. 30 -*

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி 2 ஆயிரத்து 553 மருத்துவப் பணியிடங்களுக்கான தேர்வு முன்கூட்டியே ஜனவரி 5 ஆம் தேதி நடத்தப்பட உள்ளதாகக் கூறினார்.

அண்மையில் ஆயிரத்து 21 அரசு மருத்துவர்கள் புதிதாக பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும், 296 அரசு மருத்துவக் கல்லூரி உதவி பேராசிரியர்கள் இணை பேராசியர்களாக உயர்வு பெற்றுள்ளதாகவும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

இதேபோன்று, 110 இணை பேராசிரியர், பேராசிரியர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

நீண்ட நாட்களாக பணியாற்றிய தொகுப்பூதிய செவிலியர்கள் ஆயிரத்து 200 பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளதாகவும், கொரோனா காலத்தில் பணியாற்றிய 940 பேர் தொகுப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பாக இராமநாதபுரம் சேதுபதி விளையாட்டு திடலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் கபாடி போட்டியினை இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் துவக்கி வைத்து சிறப்பித்தார். உடன் செயற்குழு உறுப்பினர் மிசா அகமது தம்பி, ஒன்றியப் பெருந்தலைவர் கே.டி.பிரபாகரன், ஒன்றியச் செயலாளர்கள் கே.கதிரவன், முத்துக்குமார், நகரச் செயலாளர் ஜீவரத்தினம் மற்றும் வழக்கறிஞர் அணியைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை இராமநாதபுரம் மாவட்டம் வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கருணாநிதி ஏற்பாடு செய்திருந்தார்.